செ.வெ.எண்: 12 நாள்: 07.01.2020

**தொழிற்சங்கங்கள் அறிவித்துள்ள நாளைய வேலை நிறுத்தத்தின் போது பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்காத வகையில் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி.இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

தொழிற்சங்கங்கள் அறிவித்துள்ள நாளைய வேலை நிறுத்தத்தின் போது பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்காத வகையில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சியரகத்தில் இன்று (07.01.2020) ஆட்சியர் திருமதி.பி.உமாமகேஸ்வரி.இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.பி.வி.அருண்சக்திகுமார்.இ.கா.ப., முன்னிலையில் நடைபெற்றது. பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

நாளைய தினம் சில தொழிற்சங்கங்களால் அறிவிக்கப்பட்டுள்ள நாடு தழுவிய வேலை நிறுத்தத்தையொட்டி புதுக்கோட்டை மாவட்டத்தில் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்காத வகையில் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. குறிப்பாக புதுக்கோட்டை மாவட்டத்தில் சட்டம் ஒழுங்கை பேணி பாதுகாக்கும் வகையில் பொதுமக்கள் கூடும் இடங்கள், பேருந்து நிலையங்கள், பேருந்து வழித்தடங்கள், கடை வீதி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் போதுமான காவலர்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

பொதுமக்களின் அத்தியாவசிய தேவைகளான குடிநீர் வசதி, காய்கறிகள், பால், உணவுப்பொருட்கள், பெட்ரோல் உள்ளிட்டவைகள் பொதுமக்களுக்கு தங்கு தடையின்றி கிடைக்கும் வகையில் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அனைத்து போக்குவரத்து பணிமனைகளிலும் தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, பொதுமக்களின் நலன் கருதி அனைத்து பேருந்துகளும் வழக்கம் போல் இயங்குவதை அலுவலர்கள் உறுதிசெய்யவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் பொதுமக்களின் அன்றாட பணிகளில் எவ்வித பாதிப்பும் ஏற்படாமல் வழக்கம் போல் தங்களது பணிகளை மேற்கொள்ள மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் போதுமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி.இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் பெ.வே.சரவணன், வருவாய் கோட்டாட்சியர்கள் டெய்சிகுமார், குணசேகரன், தண்டாயுதபாணி மற்றும் அனைத்துத்துறை அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**